**செ.வெ.எண்: 73** **நாள்: 30.10.2021**

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.10.2021) நடைபெற்றது.

2021-22 ஆண்டு சம்பா நெல் சாகுபடி செய்திட 1,57,000 ஏக்கர் இலக்கு பெறப்பட்டு இது நாள் வரை நேரடி விதைப்பாக 1,04,988 ஏக்கரும், நடவாக 34,945 ஏக்கரும் மொத்தம் 1,39,933 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 634 ஏக்கர் பரப்பில் நடவு செய்திட நாற்றங்கால் தயார் நிலையில் உள்ளது. தற்பொழுது சம்பா மற்றும் தாளடி சாகுபடி 90 சதவீதம் முடிவடைந்துள்ள நிலையில் இதுவரை 598 மெ.டன் நெல்விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மத்திய கால நெல் இரகமான CO 50 நெல் இரகம் 1500 கிலோ தற்பொழுது இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2021-22-ஆம் ஆண்டிற்கு நெல் மற்றும் பயறுவகை பயிர்கள் 91,300 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளவும் இதன் மூலம் 2.40 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் அக்டோபர் 2021 மாதம் வரை 69,093 ஹெக்டேர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டு 0.52 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது யூரியா 1018 மெ.டன், டி.ஏ.பி 233 மெ.டன், பொட்டாஷ் 195 மெ.டன், காம்ப்ளக்ஸ் 467 மெ.டன் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் மற்றும் தனியார் கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் நிலவி வரும் டி.ஏ.பி உர பற்றாக்குறையினை போக்கும் வகையில் அதிக அளவில் காம்ப்ளக்ஸ் உரங்களை இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டதின் மூலம் தரிசு நிலங்களை சீர்செய்து சாகுபடிக்கு உகந்ததாக மாற்றிட அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் நிதி ஆண்டில் தென்னை பயிர்களில் சொட்டுநீர் பாசனமும், இதர பயிர்களில் தெளிப்பு நீர் பாசனமும் மேற்கொள்ள 600 ஹெக்டேர் பொருள் இலக்கு பெறப்பட்டு ரூ.3.83 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் சம்மந்தப்பட்ட அலுவலர்களை உாயி ஆவணங்களுடன் முன்கூட்டியே பதிவு செய்து பயன்பெற்றுக்கொள்ளவும்.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டு 2021-22 –ல் சம்பா நெற்பயிருக்கான காப்பீடு செலுத்த எதிர்வரும் 15.11.2021 அன்றே கடைசி நாள் ஆகும். நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 1,39,933 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது வரை 67,439 ஏக்கர் மட்டுமே விவசாயிகளால் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உடனடியாக தங்கள் அருகில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் அல்லது வங்கிகள் அல்லது பொது சேவை மையங்களில் காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடப்பு 2021-22 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தின் கீழ் 200 ஹெக்டேர் இலக்காக பெறப்பட்டுள்ளது. இதில் நாகப்பட்டினம் வட்டாரத்திற்கு 50 ஹெக்டேர், திருமருகல் வட்டாரத்திற்கு 50 ஹெக்டேர், கீழ்வேளூர் வட்டாரத்திற்கு 50 ஹெக்டேர் மற்றும் கீழையூர் வட்டாரத்திற்கு 50 ஹெக்டேர் என பிரித்து அளிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யபட்டு வருகிறது. நடப்பு 2021-22 ஆம் ஆண்டு கூட்டு பண்ணைய திட்டத்தின் கீழ் 4 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் (FPGs) அமைத்திட இலக்கு பெறப்பட்டு கீழ்வேளுர், திருமருகல், தலைஞாயிறு மற்றும் வேதாரண்யம் ஆகிய வட்டாரங்களுக்கு தல 1 உழவர் உற்பத்தியாளர் குழு பிரித்து அளிக்கப்பட்டு உழவர் ஆர்வலர் குழுக்கள் (FIGs) அமைக்கப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் ஆண்டிற்கு ரூ.6000/- நிதி உதவி வழங்கும் திட்டம். இத்திட்டத்தின் கீழ் புதிதாக பதிவு செய்ய தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அதிக அளவு நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் மாற்றுப் பயிரை, பயிரிட மாற வேண்டும். கிரேடு ஏ அரிசி வகையை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும். இடி, மின்னல் மற்றும் தாழ்வான மின் கம்பங்கள் உள்ள இடங்களில் கவனமாக இருக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.சா.பன்னீர்செல்வம், நெல்கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.கோ.நடராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், நேர்முக உதவியாளர் திரு.எஸ்வெங்கடேசன், வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.சி.முருகவேல், விவசாய பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**